# தேவனை அறிந்துகொள்வதற்கு



பாடம் 2 ஏப்ரல் 11, 2026



“ஒன்றான
மெய்த்தேவனாகிய
உம்மையும் நீர்
அனுப்பினவராகிய
இயேசு
கிறிஸ்துவையும்
அறிவதே
நித்தியஜீவன்.”
(யோவான் 17:3)

தேவனைப் பற்றிய நமது புரிதல் பாவத்தால் சிதைக்கப்பட்டுள்ளது. விலங்குகள் அல்லது மனிதர்கள் போன்ற உருவங்களில் அவரை சித்தரிக்க நாம் முயன்றிருக்கிறோம். அவர் மனம் போன போக்கில் செயல்படுபவராகவோ அல்லது கொடுங்கோலராகவோ சித்தரிக்கப்பட்டுள்ளார். இறுதியில், மனிதகுலம் தேவனுடைய ஒரு பிம்பத்தை தன் சாயலில் உருவாக்கியுள்ளது.



ஆனால் தேவன் உண்மையில் எப்படிப்பட்டவர்? அவரை புரிந்துகொள்வது நம்முடைய அறிவுக்கு எட்டாத அளவுக்கு அவர் அவ்வளவு பெரியவரா? நிச்சயமாக, நாம் எவ்வளவு முயன்றாலும், நம் மனதால் தேவனை புரிந்து கொள்ள முடியாது. நமக்கு உதவி தேவை.

ஆனால் உதவி வந்துவிட்டது. அவர் எப்படிபட்டவர் என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்களா? வேதாகமத்தில், தேவனுடைய இயல்பை பற்றிய உண்மையான வெளிப்பாடு நமக்கு கிடைக்கிறது.



- தேவனுடைய பண்புகள்
- தேவனுடைய குணம்:
  - தேவன் பரிசுத்தர்
  - தேவன் அன்பானவர்
- தேவனை அறிதல்:
  - சிருஷ்டிப்பில் வெளிப்பட்ட தேவன்
  - தேவன் இயேசுவில் வெளிப்பட்டார் (இம்மானுவேல்)



# தேவனுடைய
# பண்புகள்

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது." (சங்கீதம் 89:8)

## தேவனுடைய பண்புகள்

வேதாகமம் தேவனைப் பற்றிய மிகவும் உண்மையான, தெளிவான மற்றும் சீரான சித்திரத்தை அளிக்கிறது. அவருடைய பண்புகளின் மூலமாகவே நாம் அவரை அறிந்து கொள்ள அது அனுமதிக்கிறது.



### தேவனுடைய சில பண்புகள்

- சர்வவல்லமையுள்ள தேவன் (ஆதி 17:1)
- சகலத்தையும் அறிந்தவர் (1 யோவான் 3:20)
- எதிர்காலம் அறிந்தவர் (ஏசாயா 46:10)
- நீதியுள்ளவர் (சங்கீதம் 11:7)
- இரக்கமுள்ளவர் (உபாகமம் 4:31)
- பொறுமையுள்ளவர் மற்றும் ஆறுதலின் தேவன் (ரோமர் 15:6)
- கிருபை அளிப்பவர் (ரோமர் 3:24)
- மன்னிக்கிறவர் (சங்கீதம் 86:5)
- இராஜா (சங்கீதம் 47:7)
- நித்தியமானவர் (ஆதியாகமம் 21:33)

தன் பங்கிற்கு, சாத்தானும் ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய தன்மையை திரித்து, அவர் தன் சொந்த நலனை மட்டுமே நாடும், ஒரு சுயநலமுள்ளவர் என்று காட்ட முயன்று வருகிறான் (ஆதி. 3:4-5).



# தேவனுடைய குணம்

# தேவன் பரிசுத்தர்

"ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்." (ஏசாயா 6:3)

தேவனுக்கு அருகில் நிற்கக்கூடிய தேவதூதர்கள் அவரை, "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" (ஏசா. 6:3; வெளி. 4:8) என்று துதித்தார்கள். இந்த பண்பு அவருடைய குணாதிசயத்துடன் மிகவும் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. ஏசாயா அதை தேவனுடைய நாமமாக பயன்படுத்துகிறார்: "என்று பரிசுத்தர் சொல்லுகிறார்". (ஏசா. 40:25; 57:15).



பரிசுத்தமாக இருப்பதன் அர்த்தம் என்ன? இது புனிதபடுத்தப்பட்ட, ஒதுக்கபட்ட, தூய்மைப்படுத்தபட்ட என்று பொருள். தீமையிலிருந்து விலகி, தேவன் நமக்கு ஒப்படைத்த வேலையை செய்யும் போது நாம் பரிசுத்தமாக இருக்கிறோம். (எண். 15:40; லேவி. 11:44; 1 பேது. 2:9).

ஆனால் இது தேவனுக்கு எவ்வாறு பொருந்தும்? அவர் தீமையிலிருந்து முற்றிலும் வேறுப்பட்டவர் மற்றும் பாவத்துடன் எவ்வித தொடர்பும் இல்லை.

இதன் பொருள், அவர் பரிசுத்தராக இருப்பதால், அவருடைய அன்பு பரிசுத்தமானது, தூய்மையானது மற்றும் சுயநலம் இல்லாதது. அவர் பரிசுத்தராக இருப்பதால், அவருடைய சர்வ வல்லமை பரிசுத்தமானது, தூய்மையானது, சுயநலம் இல்லாதது. அவருடைய அனைத்து பண்புகளும் பரிசுத்தம் மற்றும் தூய்மையால் நிரப்பட்டுள்ளன.


# தேவன் அன்பானவர்

"தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." (1 யோவான் 4:16)

தேவன் அன்பை கொண்டிருப்பது மட்டுமில்லாமல், அன்பை அருள்பவரும் ஆவார் (அவர் இவ்விரண்டையும் செய்கிறார்), ஆனால் தேவனே அன்பாக இருக்கிறார்" (1 யோவான் 4:8, 16). பரிசுத்தத்தை போல, அன்பும் இறைத்தன்மையின் ஒரு உள்ளார்ந்த பகுதியாகும்.



அன்பினிமித்தம், அவர் மனுக்குலத்தை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்: மேலும், ஒருவரையொருவர் நேசிக்குமாறு அவர்களுக்கு "கட்டளையிட்டார்" (ஆதி. 2:24)



அன்பினிமித்தம், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த போது, அவர் அவர்களை தேடிச் சென்று அவர்களுக்கு நம்பிக்கை அளித்தார் (ஆதி. 3:9, 15)



அன்பினிமித்தம், அவர் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து, மனித குலத்தையே ஆசீர்வதிப்பாதாக வாக்கருளினார்(ஆதி. 26:4)



அன்பினிமித்தம், அவர் தன் ஒரே பேறான குமாரனாகிய –இயேசு கிறிஸ்துவை– நம்முடைய பாவங்களினிமித்தம் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார்(யோவான் 3:16)



அவருடைய அன்பிற்கு நான் எவ்வாறு பதில் செய்வது?

"அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்." (1 யோவான் 4:19).


# தேவனை அறிதல்

# சிருஷ்டிப்பில் வெளிப்படுத்தப்பட்ட தேவன்



"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது." (சங்கீதம் 19:1)

வேதாகமம் தேவனை אֱלֹהִים (*ஏலோகீம்*) என்று குறிப்பிடுவதன் மூலம் தொடங்குகிறது. இந்த வார்த்தையின் நேரடி மொழிபெயர்ப்பு "தேவர்கள்" என்றிருந்தாலும், இது ஒரு ஒருமை சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது. இது போன்ற ஒன்று "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." (ஆதி. 1:1).



இது வார்த்தையின் [இயேசு கிறிஸ்துவின்] மூலமாகவும், ஆவியின் தலையீட்டுடனும், தற்போது இருப்பவை அனைத்தையும் தோற்றுவிக்கும் வல்லமை கொண்ட படைப்பாளரை நமக்கு முன் நிறுத்துகிறது (ஆதி.1:1-3; யோ. 1:1-3).

ஆதியாகமம் 2ஆம் அதிகாரத்தில், தேவனுக்கான ஒரு தனிப்பட்ட பெயர் சேர்க்கப்படுகிறது: יְהוָה (*யேகோவா*). இப்போது அவர் வெறுமனே, "அது உண்டாக கடவது" என்று கூறுவதில்லை. அவர் மனிதனை எடுத்து, தம் கரங்களாலேயே அவனை வடிவமைக்கிறார். வல்லமையுள்ள அந்த இறைவன், தன்னை ஒரு தனிப்பட்ட அணுகக்கூடிய தேவனாக வெளிப்படுத்துகிறார்.

அவர் நம்மை தொடுகிறார், நம்மிடம் பேசுகிறார், நமக்கு கற்றுக் கொடுக்கிறார், நமக்கு நம் பணியை ஒப்படைக்கிறார்... அவர் நம்மை நேசிக்கிறார்.

# தேவன் இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டார் (இம்மானுவேல்)

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." (யோவான் 1:18)



தேவன் எத்தகையவர் என்பதை நாம் அறிய விரும்பினால், இயேசுவை அறிந்துகொள்வோம். அவரே மனித அவதாரம் எடுத்த தேவன் ஆவார் (யோவான் 1:14), நாம் அவரை காணவும் அவர் பேசுவதை கேட்கவும் இயலும் பொருட்டு, அவர் மனித இயல்பை ஏற்றுக்கொண்டு தம்மை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18; 14:9; 1 யோவான் 5:20).

அவருடைய வாழ்வின் நோக்கத்தை சுட்டிக்காட்டும் ஒரு தீர்க்கதரிசன பெயரின் கீழ் அவர் அறிவிக்கப்பட்டார்: இம்மானுவேல், தேவன் நம்மோடு இருக்கிறார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23). நான்கு நற்செய்தியாளர்கள் அவரை நமக்கு முன் வெவ்வேறு கோணங்களில் முன் வைக்கின்றனர்.



| | | |
|---|---|---|
| மத்தேயு | ஒரு யூதரிடமிருந்து யூதர்களுக்கு | அவர் தாம் வாக்களித்ததை நிறைவேற்றும் மேசியா ஆவார் |
| மாற்கு | ஒரு யூதரிடமிருந்து புறஜாதியாருக்கு | பிறருக்கு சேவை செய்வதில் எப்போதும் கவனத்துடன் இருப்பவர் |
| லூக்கா | ஒரு புறஜாதியினரிடமிருந்து புறஜாதியினருக்கு | மனிதநேயமிக்க மற்றும் இரக்கமுள்ள |
| யோவான் | ஒரு யூதரிடமிருந்து யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் | சரீர மற்றும் ஆவிக்குரிய வாழ்வை அளிப்பவர் |

“ஆயிரக்கணக்கானோர் தேவனையும் அவருடைய பண்புகளையும் குறித்து தவறான கருத்தை கொண்டுள்ளனர்... தேவன் சத்தியத்தின் தேவன். நீதியும் இரக்கமும் அவருடைய சிங்காசனத்தின் பண்புகளாகும். அவர் அன்புக்கும், இரக்கத்திற்கும், கனிவான பரிவுக்கும் உரிய தேவன். இவ்வாறுதான், அவருடைய குமாரனான நம் மீட்பரின் மூலம் அவர் வெளிபடுத்தப்படுகிறார். அவர் பொறுமைக்கும், நீடிய-பொறுமைக்கும் உரிய தேவன். நாம் வணங்கும் அந்த தெய்வம் அத்தகையதாய் இருந்து, அதன் குணாதிசயங்களுடன் நாம் ஒன்றிணைய முயல்கிறோமானால், உண்மையான தெய்வத்தைத்தான் நாம் வணங்குகிறோம்.”

எலன் ஜி உவைட் (காட் கேர்ஸ் ∴பார் அஸ், ஆகஸ்ட் 8)